தேவவாக்கின் வல்லமை.

அறிவு வல்லமையாயிருக்கிறது. ஆதலால் அறிவைத் தன்னுள் அடக்கியிருக்கிற எந்தப் புத்தகமும், வல்லமையுள்ளதாயிருக்கிறது. நல்லபுத்தகங்கள் எல்லாம் இவ்வுலகத்திலே வல்லமைகளாய் இருக்கின்றன. இக்கருத்தில் விவிலியபுத்சகம் ஒரு வல்லமையாயிருக்கிறதென்று எல்லாரும் ஒத்துக்கொள்ள வேண்டும். பாவக் குற்றத்தைக் கடிந்துபேசுவதிலும், பரிசுத்தத்தை வியந்து கூறுவதிலும், சிறந்த சீவிய சரித்திரங்களிலும், மோட்சத்தையும் நரகத்தையும் விபரிப்பதிலும் இவ் விவிலியபுத்தகத்திலே மகா வல்லமை யிருக்கிறது. விவிலியபுத்தகத்தை, விசேஷமாய் இயேசுவின் சரித்திரத்தை, மனிதர் வாசிக்கும்பொழுது, பாவத்தை அகற்றி அவரைப்போற் சீவிக்கும் விருப்பம் எல்லாருடைய மனதிலும் உண்டாகவே வேண்டியதாய் இருக்கும். இதுவன்றி வேறுவல்லமை இப்புத்தகத்தில் இல்லாதிருந்தாலும், உலகத்திலுள்ள மற்றெந்தப்புத்தகத்திலும் இது அளவின்றி மேற்பட்டதாகவே இருக்கும்.

ஓர் புத்தகமாகமாத்திரம் கவனித்தாலும், இதன் முழு நோக்கமும் சாய்மானமும் மனிதரைப் பரிசுத்தத்துக்கும், பாவமற்ற சீவியத்துக்கும், மோட்சத்துக்கும் வழிநடத்துவதாகவே யிருக்கும். ஆயினும், விவிலியநூலின் விசேஷ வல்லமை இதல்ல.

இதன் உண்மையான வல்லமை அற்புதமானதாயும் திவ்வியமானதாயும் இருக்கின்றது.

I. விவிலியபுத்தகம் வல்லமை நிறைந்தது; ஏனெனில் இது பாவப்பாரத்தை நீக்கக்கூடியது.

எல்லாமனுஷரும் தேவனுக்குப் பகைஞராய் இருக்கிறார்கள். உக்கிராணக்காரனாகிய மனுஷன் தேவனில் நம்பிக்கை வையாமலும் அன்புகூராமலும் இருக்கிறான். மனுஷன் தன் சுயசித்தத்தையும் வழியையும் தள்ளித் தேவனுக்கு ஊழியஞ்செய்ய விருப்பமற்றவனாய் இருக்கிறான். ஏன்? ஏனெனில் மனுஷன் பாவஞ்செய்தானாகையால், பாவமே அவனுக்கும் தேவனுக்கும் இடையில் நிற்கிறது. பலமுறைகளிலும் பாவம் அவனுடைய ஆத்துமாவிலே பெரும் பாரமாய்த் தோற்ற, அவன் நிர்ப்பச்

தஞேரி மனப்பாக்கிய மற்றவனாகிறான். "தேவனே: பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்று, அல்லது: "கர்த்தாவே, என் அக்கிரமம் பெரிது; உம்முடைய நாமத்தினிமித்தம் அதை மன்னித்தருளும்" என்று பிரார்த்தித்து ஓலமிட அவன் ஏவப்படுகிறான். எல்லா மனுஷரும் எவ்வளவாயாவது இப் பாவப்பாரத்தையும் இத்துடனே குற்றத்தையும் நிர்ப்பாக்கியத்தையும் உணர்கிறார்கள். ஆதலாற்றான் அவர்கள் பலிசெலுத்தி, யாத்திரைபண்ணி, உபவாசித்து, பாடனுபவித்து, அரும்பெரும் பிரயாசமடைந்து, இவைகளினாலே தங்களுக்கு மன ஆறுதலையும் பரமானந்தத்தையும் வருவிக்க வகைபார்க்கிறார்கள். என்னசெய்தும், அவர்களுடைய பாவங்களைப் போக்கி அவர்களை மனப்பாக்கியராக்கும் புத்தகம் விவிலிய நூலேயன்றி வேறொன்றும் இல்லை. விவிலியபுத்தகமே இந்த நன்மையைச் செய்யும் வல்லமையுள்ளது.

பாவ உணர்ச்சியே மனுஷனுக்கு மகாபெரிய பாரம். எல்லாமனுஷரும் இப்பாரத்தைச் சுமந்துகொண்டு திரிகிறார்கள். ஆயினும் ஒவ்வொரு மனுஷனுடைய மனச்சாட்சியிலுமிருந்து இப்பாரத்தை இறக்கத்தக்கதே விவிலியநூலின் வல்லமை. எல்லாக்காலங்களிலும், எல்லாத்தேசங்களிலும், எல்லாமனுஷரிடமிருந்தும், பாவப்பாரத்தை நீக்கத்தக்கது விவிலியநூலே. இது "எல்லாமனுஷரும் பாவஞ்செய்து, தண்டனைத்தீர்ப்புக்கு உட்பட்டிருக்கிறார்கள்" என்று சொல்லுகின்றது. இதன் உண்மையை நாம் எல்லாரும் உணருகிறோம். ஆனாலும் "பரமண்டலத்தில் இருக்கிற நமது பிதா, பாவத்தில் விழுந்து வழிதப்பித்திரிகிற மனிதசாதியாரின்மேல் இரங்கி, ஒருவனாவது அழிந்துபோவதை விரும்பாமல், தமது ஒரேபேறான குமாரனைப் பாவத்துக்குப் பலியாகவும் மீட்புப்பொருளாகவும், பாவிகளுக்குப் பிணையாளியாகவும் தந்திருக்கிறார்; எல்லாமனிதரும் அவரை நம்பி இரட்சிப்படையலாம்" என்றும் விவிலியபுத்தகம் சொல்லுகின்றது. பாவத்தின் வல்லமையினின்று எல்லாமனிதரையும் இழுத்து, தேவனிடம் அவர்களை முழுதும் சேர்க்கக்கூடிய காந்தம் இதுவே. இயேசு: "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லாரையும் என்னிடத்தில்

இழுத்துக்கொள்ளுவேன்" என்றார். அப்போஸ்தலனாகிய பவுலும், தன் அனுபவத்தைக் கொண்டு: "நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையில் அறையுண்டிருக்கிறேன் "என்றார்.

பாவப் பாரஞ் சுமந்தவர்களும், ஆசாபாசங்களுக்கு அடிமைகளுமாயிருக்கிற மனிதர் யாவருக்கும் ஒரு இரட்சகரை வெளிப்படுத்தி, அவர் வழியாய்ப் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும் அவர்களிருதயத்தில் அருளி:

"பிதா ஐக்கியப்பட்டார்,
மன்னிக்கும் சொல்கேட்டேன்;
தம்பிள்ளையாய் ஏற்பார்,
நான் அஞ்சவேமாட்டேன்;
நம்பிக்கையிற் கிட்டிச்சேர்வேன்,
அப்பா, பிதாவென்று சொல்வேன்"

என்றுபாடவைவி, எத்தேசத்தவர்கள், பாஷைக்காரர், கிறத்தவர்களாயினும், நீசப்பாவிகளாகிய சகலருக்கும் உலக முடிவு பரியந்தம் பாவ மன்னிப்பும் மனச்சமாதானமும் தந்து, மகிழ்ந்து பாடச்செய்யும் அதிசய கிரியையை நடப்பிக்கும் புத்தகம் ஓர் வல்லமையாகவே இருக்கிறதென்று நாம் சொல்வது நமது கடமையே.

II. தேவவாக்கு வல்லமை நிறைந்தது; ஏனெனில் அது மனிதரைப் பாவத்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை செய்கிறது.

மனிதர் பாவப் பாரத்தினால் வருந்துகிறார்கள்; அந்தப்பாரத்தை மன்னிப்பு நீக்குகின்றது. மனிதர் பாவத்துக்கு அடிமைகளாயிருக்கிறார்கள்; "விடுதலை"யே அவர்களைக்காத்துக்கொள்ளக்கூடும். "மன்னிப்பு" மாத்திரம் எனக்கருதிய இரட்சிப்பு, உள்ளபடி கவனித்தால் இரட்சிப்பல்ல. குடிவெறியனை அல்லது பொய்யனை நீ மன்னித்து விடக்கூடும். ஆனால் திரும்பவும் குடிகாரன் குடிக்கவும் பொய்யன் பொய்சொல்லவுங் கூடும். குடிகாரன் குடியை வெறுக்கிற தெளிந்த புத்தியுள்ளவனாகவும், பொய்யன் மெய்யனாகவும் மாறவேண்டும். இதுவே அவர்களுக்கு நன்மையா

கும். அதுபோல் பாவிக்கு வேண்டியது மன்னிப்பு மாத்திரமல்லப் பாவி பரிசுத்தனாய் மாறவேண்டும். விவிலிய வேதம் தரும் இரட்சிப்பு பெறுமதியற்ற மன்னிப்புமல்ல, பெற்ற உடனே அற்றுப்போகும் சமாதானமுமல்ல. பாவ மன்னிப்பைக்குறித்தும், நியாயப்பிரமாணந் திருத்தியாதலைக் குறித்தும், தண்டனைத்தீர்ப்பினின்று விடுதலை பெறுதலைக்குறித்தும் விவிலிய வேதம் அறிவிப்பதுமன்றி: "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்" என்றுஞ் சொல்லுகின்றது.

மன்னிப்புமாத்திரமல்ல, வல்லமை, பாவத்தைக் கீழ்ப்படுத்தும் வல்லமை, பசாசை வெற்றிகொள்ளும்வல்லமை, உலகத்தை யெதிர்த்துவெல்லும் வல்லமை, சோதனைகளை மேற்கொள்ளும் வல்லமை, "தெளிந்த புத்தியும் நீதியும் தேவ பக்தியுமுள்ளவர்களாய் இவ்வுலகத்திலே சீவனம் பண்ணும்" வல்லமையும் தேவ வாக்கினால் நமக்குண்டு.

மனிதர் இப்புத்தகத்துக்குச் செவிகொடுக்கவும் இதன் போதனைகளைப் பின்பற்றவும் கடவர்கள்; உண்மையாக மனந்திரும்பிப் பாவத்தை முற்றாய் விட்டுவிடுவதினாலும், சிலுவையிலறையப்பட்ட இரட்சகரின் புண்ணியத்தில் வைக்கும் மெய்விசுவாசத்தினாலும், இயேசுநாதரின் அடிச்சுவடுகளைப் பின்தொடர்ந்து செல்லவேண்டுமென்ற பூரண மன நிர்ணயத்தோடும், தேவனிடம் திருபக் கடவர்கள். அப்போ நிச்சயமாய், அவர்கள் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டன என்றறியும் தெளிவான அறிவைப் பெற்றுக்கொள்வார்கள். பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு வல்லமையையும் தரித்துக்கொள்வார்கள்.

பாவமன்னிப்பும், பாவத்தைக் கீழ்ப்படுத்தும் வல்லமையும் விவிலியவேத வாக்கினால் எல்லாமனுஷருக்கும் இலவசமாய் அருளப்படுகின்றன. இந்த இரண்டு நியாயங்களினாலும் விவிலியவேதம் இவ்வுலகத்தில் மகாபெரிய வல்லமையாய் இருக்கின்றது என்று அறிக்கையிடுகிறோம்.

Published by the Jaffna Religious Tract Society,
Strong and Asbury Printers, Manippay 1888,
Edition 5,000.